மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தைப் பொறுத்தவரைக்கும் அங்கு நீதி மன்றத்தைத் தனியாக அமைப்பதற்கு போதிய இட வசதி இல்லை என்ற ஒரு பிரச்சினையை உயர்நீதி மன்றம் தெரிவித்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அரசு தாக்கீது அனுப்பி உடனடியாக தக்கதோர் இடத்தைத் தேர்ந்தெடுத்துத் தருமாறு கோரியிருக்கிறது. அது குறித்து விவரங்கள் பெறப்பட்டவுடன் விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) கூவம் கழிவு நீரைக் கடலில் செலுத்துதல்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சென்னை கூவம் நதி கழிவு நீரைக் கடலுக்குச் செலுத்தி சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளக் கோரும் சென்னை மக்களின் கோரிக்கை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

சென்னை கூவம் ஆற்று முகத்துவாரத்தில் மணற்திட்டுகள் உருவாவதால் கழிவு நீர் எளிதாகக் கடலில் கலப்பதில்லை. தற்பொழுது மணற்திட்டுகளை அவ்வப்பொழுது அகற்றி இதற்கு தற்காலிகத் தீர்வு காணப்பட்டு வருகிறது. இப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு இந்தியத் தொழில் நுட்பக் கழகம் (Indian Institute of Technology, Madras) பூண்டியிலுள்ள நீரியல் ஆராய்ச்சி நிலையம் (Institute of Hydraulics and Hydrology, Poondi) மற்றும் தலைமைப் பொறியாளர் (பாசனம்) ஆகியோர் இவ்வாற்றின் முகத்துவாரத்தில் பொருத்தமான ஓரிடத்தில் ஓர் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான மதிப்பீடுகள் தயார் செய்தார்கள். இப்படித் தடுப்புச் சுவர் (Groyne) கட்டினால், தங்களின் சொத்துக்களுக்கும், கட்டுமானங்களுக்கும்

1987 மார்ச் 27] [திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

கடல் அரிப்பினால் சேதம் ஏற்படுமென சென்னைத் துறைமுகக் கழகம் (Madras Port Trust) எதிர்ப்புத் தெரிவித்தது. எனவே, இதுபோன்ற பிரச்சினைகளை கையாள்வதில் போதிய அனுபவம் வாய்ந்த பூனாவிலுள்ள மத்திய நீர் மற்றும் மின் ஆராய்ச்சிக் கழகத்திடம் (Central Water and Power Research Station) இதுபற்றி ஆராய்ச்சி செய்து விவரமான அறிக்கையினை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டு, ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவ்வறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2. கூவம் ஆற்றில் கழிவு நீர் கலப்பதும், அதன் கரைகள் ஆக்கிரமிக்கப்பட்டு அசுத்தப்படுத்தப்படுவதும், ஆற்றில் போதுமான நீரோட்டம் இல்லாததும் துர்நாற்றத்திற்கும், சுகாதாரக் கேட்டிற்கும், முக்கியக் காரணங்களாகும். சென்னையிலுள்ள கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் போன்ற அனைத்து நீர்வழிகளிலும் உள்ள சுகாதாரக் கேட்டினைப் போக்குவதற்காக, தலைமைச் செயலரின் தலைமையில் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளின் பிரதிநிதிகள், சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர், அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் மற்றும் இன்டாக்கின் (Intach) பிரதிநிதியையும் கொண்ட ஓர் சிறப்பு பணிக்குழு (Task Force) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு இதற்கான ஓர் சீரிய திட்டம் (Master Plan) தயாரித்து வருகிறது.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ள சென்டிரல் வாட்டர் அன்ட் ரிசர்ச் ஸ்டேசன் ஆய்வுக்கு கால வரம்பு விதிக்கப்பட்டுள்ளதா? அதன் ஆய்வு எப்போது முடியும் என்கின்ற விவரம் இல்லை. அதுபற்றி அரசு அறிவிக்குமா என்பதோடு, தலைமைச் செயலாளருடைய தலைமையிலே கூவம் மற்றும் பக்கிங்காம் கால்வாய், அடையாறு போன்ற நீர்வழிப் போக்குவரத்துக்களில் சுகாதாரக் கேடுகளை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு என்று ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்க கமிட்டி போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டியின் அறிக்கை எப்போது அரசுக்கு வந்து சேரும்? அந்த அறிக்கையின்மீது எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்

[திரு. கே. சுப்பிராயன்] [1987 மார்ச் 27

என்று தெரிவிப்பதோடு இந்த அறிக்கையைப் பெறுவதற்குமுன் இடைப்பட்ட காலத்திலேயே தொடர்ந்து கூவத்தால் பாதிப்பு வரும் என்ற காரணத்தால் தற்காலிகமாக அந்தக் கூவம் நாற்றத்தையும், அதனால் ஏற்படும் கேடுகளையும் தவிர்ப்பதற்கு கடல்நீரை கூவத்திற்குள் பம்பிங் செய்து மிக வேகமான முறையில் புளோ ஆகிறபோது இவற்றினுடைய கேடுகள் குறையும் என்ற காரணத்தால் இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வுக்கு நாட்கள் காலவரையறை வைக்கவில்லை. உறுப்பினருடைய உணர்வைப் புரிந்துகொண்டிருக்கிறோம். மிக விரைவாக அந்த ஆய்வினுடைய முடிவு வாங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தலைமைச் செயலாளருடைய தலைமையிலே போடப்பட்டிருக்கிற அந்தக் குழு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு கூடி போதிய நடவடிக்கைகளை, எடுக்கவேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. கடல்நீரை கூவத்திலே பம்புசெய்து கூவத்தை சுத்தப்படுத்த வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். 150 கன அடி கடல்நீரை கூவத்திலே பம்ப்செய்து கோயம்பேடு பகுதியிலே கடல்நீர் ஆற்றிலே ஓடக்கூடிய திட்டத்தை செயல்படுத்த சுமார் 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவிலே பொதுப்பணித்துறை ஆய்விலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) திருவாரூர் பகுதி திருப்பள்ளி முக்கூடல் வாய்க்கால் தலைப்பு மேடிட்டுள்ளது.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் அருகிலுள்ள திருப்பள்ளி முக்கூடல் வாய்க்காலின் தலைப்பு நவீனப்படுத்தப்பட்டதால் மேடிட்டு அவ்வூரில் பாசனம் பாதிக்கப்பட்டிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.